## 28.19 உயர்நிலைக் குழு அறிக்கை –சென்னையிலிருந்து 32 கி.மீ. எல்லை வரை அடங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் பணிகளுக்கு நகர மதிப்பு (City Rate) முறையில் மதிப்பீடு தயார் செய்தல்

---

ஊரக வளர்ச்சி (தி 1) துறை

அரசாணை (4டி) எண் 29 நாள் : 22.7.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண் 320, ஊரக வளர்ச்சித்துறை நாள் 11.11.97.
2. அரசு ஆணை (நிலை) எண் 78, ஊரக வளர்ச்சித்துறை நாள் 28.4.98.

**ஆணை**

இந்திய அரசியலமைப்புசட்டம் அட்டவணை 2–ல் மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருள்கள் என்னனென்வென்று குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி முதற்கட்டமாக மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகள் ஏற்று மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள் அதிகாரங்கள் மற்றம் பொறுப்புகள் (சிறு பாசனம், சிறுகாடுகள் மற்றம் வன உற்பத்திப் பொருட்கள் பாதுகாப்பு ஆகியவற்றை தவிர) பிற இனங்கள் மீது ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன, மேலும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக்கட்சிகளின் பிரிதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டும் உயர்நிலைக்குழு அமைத்து பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் ஆணை வெளியிடப்பட்டன. உயர்நிலைக் குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.99 அன்று சமர்ப்பித்தது.

2. உயர்நிலைக்குழுவின் அறிக்கை இயல் 2ல் பரிந்துரை எண் 23

**பரிந்துரை எண் 23**

சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் எல்லைவரை அடங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் வேலைகளுக்கு சிட்டி ரேட் முறையை அமுல்படுத்தி மதிப்பீடு தயார் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.

3. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 3.5.99 மற்றும் 4.5.99 ஆகிய நாட்களில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப உயர்நிலைக்குழுவின் அறிக்கை இயல்–2 பரிந்துரை எண் 23 மீது கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

16. சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் எல்லைவரை அடங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் வேலைகளுக்கு நகர மதிப்பு (City Rate) முறையை அமுல்படுத்தி மதிப்பீடு தயார் செய்ய நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை விலை மதிப்பீட்டு பட்டியலுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. ஊரக வளர்ச்சி இயக்குநர் அம்முறையை இந்த ஆணை வெளியிடப்படும் நாள் முதல் அமுல்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (நிதித்துறை அ,சா,கு,எண் 49691/ஊரக வளர்ச்சி/99–1, நாள் 6.7.99)

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திபண்டா**
அரசு செயலாளர்